உ

சிவமயம்

# அருள் ஒளி

உலகம் முழுவதும் இந்துமதம் பரவ உழைத்த ஒப்புரவாளர் இராஜ இராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெருங்கோயில்



வைகாசி மாத இதழ்

வெளியீடு:
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
2003.

மலர் 10

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியா ரெல்லாம்.

*வைகாசி விசாக நன்நாள்*
*வையகம் போற்றும் திருநாள்*



## வற்றாப்பளை கண்ணகை அம்மன் திருக்கோயில்



உ



# அருள் ஒளி

( மாதாந்த சஞ்சிகை )

ஆசிரியர்
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2003 சுபானு வருடம் வைகாசி மாதம்

வெளியீடு :
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் 10

## உலக இந்து மகாநாடு

இலங்கையில் இம்மாதம் முதல்வாரத்தில் கொழும்பில் அனைத்துலக இந்து மாநாடு நடைபெறுவது குறித்து இந்து மக்கள் அனைவரும் மிகுந்த ஆர்வமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1982ஆம் ஆண்டு கொழும்பில் அனைத்துலக இந்து மாநாடு நடைபெற்றது. நீண்ட இடைவெளிக்குப் பின் இந்து கலாச்சார அமைச்சு இம்மாநாட்டை கூட்டி இருப்பது முக்கிய விடயமாகும். உலகளாவிய ரீதியில் இந்து மாநாடுகள் இந்தியாவிலும் பிற இடங்களிலும் சில சமய நிறுவனங்கள் நடாத்தி வருகின்றன. திருமுறை மாநாடு, சைவசித்தாந்த மாநாடு, வேதாந்தமாநாடு, இந்துதத்துவவியல் மாநாடு, இதிகாச மாநாடு போன்றவை பல சமய நிறுவனங்களாலும் பல இடங்களிலும் நடாத்தப்பட்டு வருகின்றன. கடந்த சில வருடங்களாக இந்தியாவில் இந்துமதம் சார்பான அரசியட்கட்சிகள் உருவாக்கப்பட்டு இந்துமதச் சார்புடைய அரசியல் மாநாடுகள் இந்தியா முழுவதும் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. இம்மாநாடுகளினால் இந்து இளைஞர்களிடையே இந்துமத உணர்வும் தீவிரம் எழுச்சி பெற்றமையும் அதனால் மீண்டும் அயோத்தியில் இராமர் கோயில் உருவாகி வருவதும் சகலரும் அறிந்ததே. உதாரணமாக பாரதீய ஜனதாகட்சி, இந்திய சிவசேனை கட்சி இவற்றில் முன்னணி வகிப்பது அனைவரும் அறிந்ததே. நிறுவனரீதியாக விஸ்வ இந்து அமைப்பு, சின்மயமிஷன் அமைப்பு, இந்து பிரேமகுமாரிகள் அமைப்பு போன்றவை உலகளாவிய ரீதியில் மாநாடுகளை கீழைத்

தேயங்களிலும் மேலைத்தேயங்களிலும் நடாத்தி வருகின்றன. இங்கிலாந்திலுள்ள சைவத்திருக்கோயில் ஒன்றியம் 1998ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் உலக இந்துமாநாட்டை இங்கிலாந்தில் நடாத்தி வருகின்றது. உலக சைவப் பேரவை என்ற ஓர் அமைப்பு உருவாக்கப் பட்டு பேரூர் ஆதீனகுருமுதல்வர் இராமலிங்க சுவாமிகளின் அனுசரணையோடு உலக சைவமாநாடுகளை நடாத்திவருகின்றனர். இந்து மதத்தவர்களிடையே ஒன்றுபட்ட ஒருமித்த சிந்தனைகளை வெளிப்படுத்துகின்ற சர்வதேசரீதியான ஓர் அமைப்பு உருவாகாத காரணத்தினால் பல்வேறு மாநாடுகள் பல பிரிவுகளாக பிரிந்து நடாத்துவது இந்துக்களின் தவக்குறைவே. உலக மாநாடுகளில் அறிஞர்கள் கூடி ஆராய்ச்சிகளை சமர்ப்பிப்பதும் புதிய கொள்கைகளைப் பிரகடனம் செய்வதும் வழமை. நல்ல சிந்தனைக்குரிய அரிய விடயங்களை உலகசபையில் பகிர்வதற்கும் மாநாடுகள் வாய்ப்பாக அமையவேண்டும். மாநாடுகள் ஏதாவது கருப்பொருளை மையமாகக்கொண்டு கூட்டப்படும் போது அது பயனுடையதாக அமையும். ஒரு மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அடுத்த மாநாட்டில் எவ்வளவு தூரம் நிறைவேற்றப்பட்டது என ஆராய்வது அறிவுடையோர் கடன் ஆகும். மாநாடுகள் கூட்டப்படும் காலச்சூழலுக்கேற்ப இந்துமதம் எதிர்நோக்கும் சவால்களை அறிஞர்கள் ஆராய்ந்து நல்ல தீர்மானங்களை எடுத்து மக்களை ஆற்றுப்படுத்த வேண்டியது மாநாட்டை கூட்டுகின்ற பேரறிவாளர்களின் பெருங்கடனாகும். இலங்கையில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் காலம் தொடக்கம் எம்சமயம் சார்ந்த மாநாடுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. சைவபரிபாலனசபை சைவவித்தியா விருத்திச்சங்கம் போன்ற நிறுவனங்கள் ஓரளவு சைவமாநாடுகளை எம்மண்ணில் நடாத்தியமை குறிப்பிடத்தக்கது. 1981இல் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் சைவசித்தாந்த சமாஜத்தின் பவளவிழா மாநாடு பெரியளவில் நடைபெற்றது. முந்நூறுக்கு மேற்பட்ட இந்தியப் பேராளர்கள் இராமேஸ்வரம் பாதையூடாக கப்பலில் வந்து துர்க்கை அம்பாள் ஆலய வீதியில் அமைக்கப்பட்ட கொட்டகையை அலங்கரித்தனர். இலங்கையில் இம்மாதம் நடைபெறும் மாநாடு உலகளாவியரீதியில் இந்துமதம் எதிர்நோக்கும் சவால்களுக்கு வழிகாட்டும் மாநாடாக அமைவதே சாலப் பொருத்தமானதாகும். பொருத்தமான கருப்பொருளை இம்மாநாட்டில் முன்வைக்கப்பட்டு அறிஞர்கள் ஆராய்வது பயனுடையதாக அமையும். மறைவாக நமக்குள்ளே பழையகதை பேசுவதிலோர் மகிமையில்லை. மதத்தின் மகிமையையும் நீடித்து நிலைத்து நிமிர்ந்து நிற்பதற்கான வழிவகைகளையும் ஆராய்வது பேரறிஞர்களின் பெருங்கடமையாகும். போரின் அனர்த்தங்களினால் பூசை அற்றுப்போன கோயில்கள் முதல் உலகளாவிய ரீதியில் எம்மதத்துக்கேற்பட்ட இடையூறுகள் வரை ஆழ அகல அலசி ஆராயவேண்டியது அவசியமாகும். மாநாடு குறிக்கோள் உடையதாகவும் காலத்திற்கு காலம் மாநாடு எம்மண்ணில் நடாத்துவதற்குரிய ஒழுங்கையும் இம்மாநாடு ஊடாக உருவாகவேண்டும் என வேண்டி அகில உலக இந்துமாநாட்டை வரவேற்போமாக.

ஆசிரியர்

சைவநற்சிந்தனை

# பிள்ளைகளுக்கு நல்வாழ்வு காட்டுவோம்

கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம் அவர்கள்

அன்புப் பெற்றோர்களே,

சற்று நில்லுங்கள். கொஞ்சம் பொறுமை பேணுங்கள். எங்கள் செல்வக் குழந்தைகளின் எதிர்காலம் பற்றி நிதானமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஓடி ஓடி உழைக்கின்றோம். ஓய்வு ஒழிச்சலின்றி வேலை, வேலை என்ற அதே சிந்தனைதான். விடுமுறை தினங்களைக்கூட வேலை நாட்கள் ஆக்கிக் கொண்டிருக்கிறோம். பகல் இரவு என்ற பேதமில்லாமல் மாய்கிறோம். ஆனமுறையாக உண்ண நேரமில்லை; உடுக்க நேரமில்லை; பிறருடன் கலந்து பேச நேரமில்லை. ஏன் குடும்பத்தாருடன் கொஞ்சநேரமாதல் ஆற அமர இருந்து, பேசி மகிழ கிஞ்சித்தும் அவகாசம் இல்லை. நிற்பதானால் ஒற்றைக் காலிற்தான் நிற்போம். நடப்பதில்லை, ஓடுகிறோம். இல்லை, இல்லை, பஞ்சாய்ப் பறக்கிறோம் யாராவது குறுக்கே வந்து குசலம் விசாரித்தால், வெளியிலே சிரிப்பைச் சிரமப்பட்டுக் காட்டினாலும், மனத்தினால் வைது கொண்டே இருப்போம். ''இந்த மனிதன், இந்த நேரத்தில், சிவபூசையிலே கரடி புகுந்தது போல வந்து, என் வேலையைக் குழப்பிவிட்டாரே,'' என்று மனம் புழுங்கி வெந்துகொண்டிருக்கும்.

''எப்ப நீங்கள் ஓய்வாக இருப்பீர்கள்,'' என்று யாராவது டெலிபோனிலோ, நேரடியாகவோ கேட்டுவிட்டால் போதும், உடனே பொத்தென்று வந்துவிடும் கோபம். ''ஓய்வா, எனக்காம், அந்த ஓய்வைத் தானே தேடிக்கொண்டிருக்கிறேன். கிடைக்கமாட்டேனென்கிறதே.'' என்று கோபமும் தாபமும் சேர்ந்த குரலில் கூறிவிடுகிறார்கள். அட கடவுளே, இப்படியொருகாலமா? ஓய்வு ஒழிச்சலின்றி ஓட்டமும் நடையுமாய்த் திரியவேண்டிய காலம் என்று எண்ணுவதைத் தவிர வேறென்ன செய்வது!

எங்கும் எதிலும் அவசரம். சிந்தனை, பேச்சு செயல் எல்லாவற்றிலுமே வேலை, உழைப்பு, ஊதியம், பதவியுயர்வு நேரம் இல்லை – இவைதான் மேலாட்சி செய்கின்றன. இந்த நிலையில் இப்பேர்ப்பட்டவர்களின், மனங்களில் கடவுள் பற்றிய நினைப்பிற்கு ஏது இடம்? பிள்ளைகளின் சமய வாழ்விற்கு வழிகாட்டத்தான் ஏது நேர அவகாசம்?

இவ்வாறு ஏன் நடந்துகொள்கிறீர்கள் என்று கேட்டால் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

எல்லாமே எங்கள் பிள்ளைகளின் நலனுக்காகத்தான் குடும்பம் நடத்துவது என்றால் என்ன இலேசுப்பட்ட காரியமா, இந்தக் காலத்தில் இருபத்து நான்கு மணித்தியாலமும் பாடுபட்டாத்தான், எங்கள் பிள்ளைகளைப் பட்டத்திற்கு இருக்க வைக்கலாம். படிப்புச் செலவு, போக்குவரத்துச் செலவு, ரியுஷன் செலவு, உணவு, உடை, கைச்செலவு என்று எல்லாத்திற்கும் பணம்தானே தேவை என்கிறார்கள் அவர்கள்.

பணம் இருந்தால் போதுமா? பிள்ளைகளுக்கு பண்பு வேண்டாமா? நல்ல குணம், ஒழுக்கம், நன்னடத்தை தேவையில்லையா? பணத்தினால் இந்த நலன்களைப் பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுத்துவிட முடியுமா? சற்றுச் சிந்தியுங்கள்.

''எல்லாமே எங்களுடைய பிள்ளைகளின் நலனுக்குத்தான்'' என்னும் குறிக்கோள் உயர்வானது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் பிள்ளைகளின் நலன் என்பதால் நாம் விளங்கிக் கொள்வது என்ன? பிள்ளைகளைப் படிக்க வைத்து, பரீட்சைகளில் சித்திபெற வைத்து, பட்டம் பெறச்செய்து, உயர் பதவிகளில் அமர்த்திவிட்டால், பிள்ளைகளுக்கு நலன்களைப் பெற்றுக்கொடுத்து விட்டதாகவும், பெற்றோர் என்ற முறையில் தங்கள் கடமையும் இலட்சியமும் நிறைவேறிவிட்டதாகவும் பலர் திருப்தி கொள்கிறார்கள்.

உண்மையில், தம்பிள்ளைகளுக்குப் படிப்பு, பட்டம் பதவி, வருவாய் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்து விட்டால் மட்டும் போதாது; அவர்கள் பண்புடையவர்களாகவும் வளர்க்கப்படவேண்டும். அப்பொழுதுதான் பிள்ளைகளுக்கு எல்லா நலன்களையும் பெற்றுக் கொடுத்தவர்களாகப் பெற்றோர்கள் திருப்தி கொள்ளமுடியும். பிள்ளைகள் இளம்பராயத்திலிருந்தே மனநலம், குண நலம், பண்பு நலம், ஒழுக்க நலம், ஆன்மிக நலம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள வீடும், வீட்டுச் சூழலும் வாய்ப்பாக அமையவேண்டும். சமயச் சூழல்கட்டி யெழுப்பப்பட வேண்டும். பெற்றோரின் ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் பிள்ளைகளுக்குத் தேவை. அவர்களின் முன்மாதிரியான நடத்தை மிகமுக்கியமானது. பெற்றோரின் வாழ்க்கை முறை, நடத்தை என்பவற்றைப் பார்த்தே பிள்ளைகள் வாழக்கற்றுக் கொள்கிறார்கள். எனவே அவகாசம் இல்லை, நேரம் இல்லை என்று சாக்குப் போக்குக் கூறிப் பிள்ளைகளைக் கண்காணிக்காமல், நல்வாழ்வு வாழப்பழக்காமல் விடுதல் ஆகாது ''ஈன்று புறந்தருதல்'' தாயின் கடமை; பிள்ளைகளைச் சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடமை சைவநெறியில் வாழ்ந்து, பிள்ளைகளுக்குப் பெற்றோர் வழிகாட்டி வந்தால் எல்லா நலன்களையும் அவர்கள் பெறுவர்.

உ

# மலர்த்தொண்டு

திரு. ஆ. கதிரமலைநாதன் அவர்கள்

சரியை மார்க்கத்தில் முதலிற் சொல்லப்படும் 'மலர்த் தொண்டு' என்ற மங்கள காரியத்துடனேயே திருத்தொண்டர் பெரிய புராணம் ஆரம்பமாகின்றது என்பது அதனைப் பாராயணம் செய்யும் அடியவர் கட்குத் தெரிந்திருக்கும்.

காவியத் தலைவரான ஆலாலசுந்தரர் இறைத் தேவைக்குரிய மலர் களை ஆய்தலில் ஏற்பட்ட தவறு காரணமாக நம்பியாரூரர் என்ற பெயருடன் பூவுலகில் மானிடராக வந்து பிறந்தார். அது போன்றே அநிந்திதை – கமலினி ஆகிய இருவரும் பரவையார் – சங்கிலியார் என்ற பெயர்களுடன் வந்து பிறந்ததாகவும் பெரிய புராணம் சொல்லுகின்றது.

இக் காவியத்துடன் இவர்களைவிட இறைவனுக்கு மலர்த் தொண்டி னைச் செய்து சிறப்புப் பெற்றோர் சிலரின் வரலாறுகளும் கூறப்பட் டுள்ளன. முருகனார் என்ற அடியார் எப்போதும் அதிகாலையிலேயே நல்ல மலர்களை ஆய்ந்து இறைவனுக்குச் சமர்ப்பிக்கும் கடமையைச் செய்து நற்கதி அடைந்தவர்.

கணநாதர் என்ற அடியவர் ஏனைய சரியைத் தொண்டுகளுடன் மலர்த்தொண்டு பற்றியும் அடியார்களுக்குப் பயிற்சி கொடுத்து அதன் காரணமாகவே நற்பேறு பெற்றவர்.

எறிபத்தர், செரித்துணையார், கழற்சிங்கர் ஆகிய மூன்று அடிய வர்களும் தமது நாளாந்தக் கடமைகளுடன் இறைத் தேவைக்கென எடுக்கப்பட்ட மலர்கள் எவ்வகையிலும் பழுதுறாது பார்த்துக் கொண்டு, அதற்காகவே குற்றங்கள் புரிந்துங்கூட சிவபதவி கிடைக்கப் பெற்றனர்.

முருகர், கணநாதர் என்பவர்கள் எப்போதுமே மலர்களுடன் சம்பந் தப்பட்டிருந்ததாக கூறும் சேக்கிழார் எறிபத்தர், செருந்துணையார், சுழற்சிங்கர் என்போரின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியுடனேயே அவர்கள் சரிதையைக் கூறி முடித்து விடுகின்றார், இது ஏன்?

"ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்"

என்ற சொற்றொடருக்கு அமையவே இவ்வாறு கூறியிருக்கலாம் எனத் தோற்றுகின்றது. ஏனெனில் இவர்கள் யாவரும் மலர்த் தொண்டினையே சிவத்தொண்டாகக் கருதியிருக்க வேண்டும் எனக்கொள்வது பொருத்த மாயில்லையா?

தேவலோகத்தில் அபிஷேகம், அர்ச்சனை என்பன செய்யப்படுவ தில்லை எனவும், அதனாற்றான் பிரம்மா விஷ்ணு முதலியோர் பூலோகத் திற்கு வருகை தந்து இறைவனை அபிஷேகித்து, அர்ச்சித்து வழிபட்டனர் எனவும் சொல்லப்படுவதுண்டு. அவ்வகையில் பூவுலகில் மானிடராக – அதுவும் இந்துக்களாகப் பிறந்த எமக்குக் கிடைத்துள்ள அந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாது தலைமேற்கொண்டு உய்வோமாக.

உ

சிவமயம்

# திருநாவுக்கரசு நாயனாருடைய பக்தி வைராக்கியம்

திரு. சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

## சித்திரைச் சதயம்

இறைவனிடத்தில் அன்புடையவர் பத்தி பண்ணலாம். பத்தி பண்ணுவது போல் கடவுளிடத்தில் பத்தி வைராக்கியத்தில் நிற்றல் எல்லோராலும் முடியாது. ஒரு சிலரால்தான் முடியும். அந்த ஒரு சிலரும் முன்னைப் பல பிறவிகளில் சிறுகச் சிறுகச் சேகரித்துக் கொண்ட தவப் பயனுடைய திரட்சியே வைராக்கிய பத்தியை வருவிக்கும் வைராக்கியத்தை நெஞ்சுறுதி அல்லது குறிக்கோளிலிருந்து அணுவளவும் பிசகாமை எனலாம்.

திண்ணனார் காளத்தி அண்ணலாருக்குக் கண் இடர்ந்து அப்பியது ஒரு பிறவியில் வந்த சிவபக்தி என்று கூறலாமா? பரஞ்சோதியார் பரமன் அடியார்க்குப் பிள்ளைக்கறி படைத்தார் என்றால் ஒரு பிறப்பில் வாய்த்த பாசத்தை வென்ற பத்தி என்று பகரலாமா?

புனிதவதியார் பூங்கயிலாயத்திற்குத் தலையினால் நடந்து சென்று சங்கரனைத் தரிசித்தார் என்றால் அது ஒருபிறப்பில் வந்த அன்பரு நெஞ்சு என்று அறையலாமா?

தாதை என்று அறிந்தும் தாள் இரண்டும் சேதித்த பின்பும் சேய்ஞுலூர்ப் பிள்ளையார் சிவபூசையில் திளைத்திருந்தார் என்றால் இரு பிறப்பாளருக்கு ஒரு பிறப்பில் சிவ உறவு எனச் செப்பலாமா?

இவ்வாறு பல்பிறவியில் திரட்டி முற்றிப் பழுத்த சிவ அன்புக் கனிவை சுருக்கின் சொல்லின் அடங்காது. விரிக்கில் பெருகும் 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' 'சிறுதுளி பெரு வெள்ளம்' என்று எல்லாம் முன்னோர் மொழிந்த முதுமொழிகள் இன்றும் இளமையோடு பொருள் பயப்பன.

திருநாவுக்கரசு நாயனாரும் அவ்வாறு பல பிறப்புக்களில் திரட்டிக் கொண்ட இறை இன்ப அனுபவத் திரண்ட முறுக்கில் திகழ்ந்தமையால் பத்தி வைராக்கியத்தைப் பேணிக் காத்தார். சைவநெறி ஒழுக்கத்தில் உறுதி கைவரப் பெறாது அதுவோ இதுவோ அங்கோ இங்கோ எங்கோ திருவருள் பாலிப்பு என்று ஏங்கித் தடுமாறித் தத்தளிக்கும் மாந்தர்

களுக்கு எல்லாம் ஒரு கட்டுத் தறியாக பக்தி வைராக்கிய தம்பமாக கரை காணாது கலங்குவார்க்குக் கலங்கரை விளக்கமாக மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து காட்டியவர் மருணீக்கியார்.

'வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மார்வரையும் தானம் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரி சுடர் வீழிலென் வேலை நஞ்சுண்டு, ஊனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே'

'நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம் நரகத்திலிடர்ப்ப டோம் நடலையில்லோம், ஏமாப்போம் பிணியறியோம், இன்பமே எந் நாளுந் துன்பமில்லை

'... ... திண்ணன் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம் அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை

'இடுக்கண்பட் டிருக்கினும் இரந்தி யாரையும்
வீடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்

'மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே

'... ... சிறுமா னேந்திரன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிறுமாந் திருப்பன் கொலோ

'சிற்றம் பலத்தரன் ஆடல்கண்டார், பீளையுடையக் கண்க
ளாற் பின்னைப் பேய்த்தொண்டர் காண்பதென்னே

'இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

'படைக்கல மாக உன் நாமத் தெழுத் தஞ்சென் நாவிற் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப் பும்முனக் காட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்தூ நீறணிந்துஞ்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம் பலத்தரனே.

''பெரியானைப் பெரும் பற்றம் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே

போன்ற தேனினும் அமுதினும் தீங்கிருப்பின் இனிய கட்டியினும் சுவைக்கும் தீந்தமிழால், பூத மைந்து நிலையிற் கலங்கினும், மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலாமல், ஓது காதல் உறைப்பின் நெறி நின் பாரம் ஈசன்பணியில் தொன்றிலாமல், விளம்பும் தகைமை இல்லாத, வீரத்தால் விளம்பலாகாது.

வீரத்தை வாயினால் விளம்பியதோடு அமையாது, கருத்தினாலும் காயத்தினாலும் காட்டியவர் திருநாவுக்கரசு நாயனார்.

நினைத்தல், சொல்லுதல், செய்தல் — ஆகிய மூன்று கரண சுத் தியை சோதனையின் போது வேதனை இல்லாமல் சாதனை புரிந்த மெய்ஞ்ஞானி வாய்மை திறம்பாத வாகீசனார்.

'திருநாவுக்கரசு நாயனார் தம்மை நாடி வந்தசேனசமுகத்தை நாடி,

'சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய்கின்ற நேசனை நீத்தலும் நினையப் பெற்றோம் நின்றுண்பார் எம்மை நினையச் சொன்ன வாசக மெல்லாம் மறந்தோ மன்றே வந்தீரார் மன்னவனா வான்தா னாரே'

என்று விளம்பினார்

'வெய்ய நீற் றறையில் ஓரெழு நாள் இனிதிருந்தார்

'தீவிடத்தால் வெஞ்சமண ரிடுவித்த பாலடிசின் மிசைந்திருந்தார்

'அண்ணல் அருந்தவ வேந்தர் ஆனை தம்மேல் வரக்கண்டு, திருப்பதிகத்தை, மன்னுலகுய்ய மகிழ்வுடன் பாடுகின்றார் திருநாவுக்கரசு நாயனாரை பாங்கொரு கல்லி லணைத்துப் பாசம் பிணித்தோர் படகில் நீங்கொலி வேலையிலேற்றி வீழ்த்திட, 'அப்பெருங் கல்லுமங் கரசு மேற் கொள்ளத் தெப்பமாய் மிதந்தது

'வண்ணங் கண்டு நானும்மை வணங்கி அன்றிப் போகேனென் றெண்ண முடிக்கும் வாகீசரிருந்தா ரமுது செய்யாது' பழையாறையில்

'ஆளு நாயகன் கயிலையி லிருக்கைகண் டல்லால்
மாளு மிவ்வுடர் கொண்டுமீ ளேனென கயிலாய பதிக்கு மறுத்துரைத் தார் கலை வாய்மைக் காவலனார்.

பாரில் பத்தி வைராக்கியம் பரந்து ஓங்குக

---

### சிறப்புப் பதங்கள்

விளங்கு தமிழில் லென் வேண்டுதல்களை
விண்ணப்பங்கள் செய்தேன் வீரத்தாயே!
இலங்கு நின்சிறப்புப் பதங்களைக் கவிக்
கோர்வையாய்க் கொண்டே — உன்னருளால்
துலங்கும் மினியென் துயர்கள் மெல்ல
விட்டகன்றிடவே துர்க்கா — தெல்லியில்
தலங்கொண்டருள் புரியுமுன் பொற்
பாதம் சரணம் சரணமம்மா தாயே!

### உன்னருள்

செவ்வாய்க் கிரகத்துக் கதி
பதியாம் செல்வ முருகனுக்கு
செவ்வேள்ளளித் தருள்புரி
யும் மெங்கள் ஸ்ரீ துர்க்கா
செவ்வாய்க் கிழமை தோறும் விரத
மிருந்து வேண்டுவார் வேண்டு
வதை யிந்தருள்பவளே! என்
வாழ்விலுமுன்ன ருளை தா தாயே!

இராம ஜெயபாலன்
கொக்குவில்

# இறைவனைக் காண்பது எங்கே?

பண்டிதை சி. இலக்குமி அவர்கள்

" அகர வுயிர் போலறிவாகி யெங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து "
— திருவருட்பயன்

எங்கும் எப்பொழுதும் வியாபித்திருக்கும் இறைவன் எத்தகையன், எங்குள்ளான் என்று சுட்டிக் காண்பது இயலாது. விறகில் தீ போல், பாலில் நெய்போல் எங்கும் நிறைந்துள்ள சோதி சொரூபத்தை அவன் படைப்பில் அவனருட் செயலில் அறிந்து இன்புறலாம்.

இறைவன் இப்படிப்பட்டரென்றெவராலும் எடுத்தியம்ப முடியாது. ஆண்டவன் ஆதியுமந்தமுமற்றவர். ஆனந்த சொரூபி. முன்னைப்பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளானவர். பின்னைப் பெருமைக்கும் பேர்த்துமப் பெற்றியினர். அன்னார் தம் பெருமை அளவிடற்கரியது. அவர் எங்கும் நிறைந்தவர். ஏகமானவர். எல்லாம் வல்லவர். அவனன்றி அவனியில் அணுவும் அசையாது. என்றுமெங்களை யாட்கொள்ளுஞ் சித்தமுடையவர். நித்தியமான தந்தையுமவரே, தாயுமவரே. நித்தியானந்தம் தரவல்லவருமவரே. இப் பூவுலகிற்கு எங்களை அனுப்பியவரும் ஆண்டவரே. எங்களுக்கான பெற்றோர் உற்றோர் மற்றுஞ் சுற்றத்தோராய துணைகளைத் தந்தார். எல்லார்க்குந் தேவையான உண்டியும் உடையும் உறையுந் தந்து காத்தருளுகின்றார். தாயிற் சிறந்த தயவான தத்துவனின் தண்ணளி மிகுந்த திருப்பார்வையில் நாமனைவரும் சகோதரரே. சகோதரர்களே! எங்களெல்லோருக்கும் ஏகமான பரமபிதா யாரெனக் காண்கின்றோமோ அவரே இறைவன்.

இறைவனின் அற்புதத்தையும் அழகையுமியற்கையிற் கண்டு ஆனந்திப்போம். கடவுள்தன் கருணையுள்ளத்தையும் மட்டற்றமாட்சியினையும் இயற்கையிலேயே காணச் செய்கிறார். பல வேளைகளிலும் நாங்கள் கண்ணிருந்துமில்லாதார்போல்கண்டு களிக்கின்றோமில்லை. இயற்கை வனப்பை இனிது நோக்கியுள்ளத்தால் உணர்வோன் ஆண்டவன் தன் அற்புதத்தை யறிந்தோனாவன். காட்டினிற் பூவையும், முட்டையுட் குஞ்சையுங் காத்திடுங்கருணைவள்ளலின் பெருமையினைக் காண்போம், வீட்டினை மறந்து, ஊனிலும் உடையிலும் நாட்டஞ் செலுத்துவன் கொல்லோ? கண்ணிமை திறவாத்தன் சிறு குட்டியைத்தூக்கிச் சென்றிடும் பூனையைப் பாருங்கள். தாய்ப்பூனை தானேவந்து தன் வாயாற்றூக்கிக்கொண்டு செல்கின்றது. குட்டியோ யாதொரு செயலுமின்றி 'மியா, மியா' என்று மாத்திரங்கத்துகின்றது. இதுபோல நாமும்

ஈசனை நோக்கிப் பிரார்த்தனை செய்தாற்போதும். எமது வல்லமையால் எச்செயலுமாகுமென்று பிரயத்தனப் படவேண்டாம். இறைவன் தானே வந்து சேமமுற வழி நடத்துவார். கழுகு தன் குஞ்சுகளைப் பறக்கப் பயிற்றுவதை நோக்குங்கள். சிறகு வளராத சிறு பறவையை உயரமான மரத்திலிருக்கும் பொந்திலிருந்து தள்ளி விடுகின்றது. குஞ்சின் மீதுள்ள கோபத்தினாலா? இல்லையில்லை, தன் குஞ்சு பறக்கவேண்டுமென்ற ஆசையினாலேயே. இதனை யுணர்ந்து நோக்குங்கால் நமக்கேற்படும் சோதனைகளால் அமைதியைக் கைவிடுவோமா? இல்லை. இயற்கையின் சிருஷ்டிப்பே அற்புதமானது. கண்ணிருந்தும் கதிரவனின்றேற் பயன் யாதோ? ஒன்றுமில்லை. அ:.தேபோல் எத்தகைய செல்வங்களுஞ் சிறப்புமிருந்தும் இறைவனைக் காணோமாயின் என்ன கதியடைகுவோம்? அருக்கனற்ற இருளிலே இன்னலுறுவான்போற் தத்தளிப்போமன்றோ? என்ன அற்புதம்! ஏகமான பராபரனுக்கெடுத்துக்காட்டாக யிலங்கும் பருதியு மேகமாயிற்றே. இதனாற் போலும் ஆன்றோர் ஆதித்தனை வழிபட்டார்கள்.

இறைவனின் இணையில் பெருமைகளையியற்கையிற் காண்கின்றோம். ஆயின் அவரினின்னோசையைக் கேட்கின்றோமில்லையே. இறைவனோடு பேசுவதெப்படி? இயற்கையோடு பேச முடியுமா? இவைபோன்ற வினாக்கள் எமதுள்ளத்திலுதித்தல் கூடும். எங்கும் நிறை ஏக கர்த்தாவுக்கு எறும்பின்கால் சறுக்குவது தானும் கேட்கின்றது. நாம்வாய்விட்டு பேச வேண்டியதில்லை. நாம் சிந்திப்பதைத் தானுமவர் அறிகின்றார். இறைவன் எமது பேச்சைக் கேட்பதோடு மாத்திரந்திருப்தியடைந்திலர். தானும் எம்முடன் பேசவிரும்புகின்றார். எம்மோடு பேசுகின்றார். ஆனால் நாம் பலமுறையும் பரம்பொருளின் ஓசையைத் தடுக்கின்றோம். ஒவ்வொருவருள்ளத்திலேயும் ஈசன் அமர்ந்திருக்கின்றார். அஞ்ஞானத்தை அகற்றி ஞானக்கண்ணால் உற்று நோக்கின் அகத்தினில் அவரைக் காண்போம். ஏகாந்தமான இடத்தில் அமைதியாக இருந்து அவர் செய்கின்ற நன்மைகட்காக எமது துதியைச் செலுத்துவோம். அவர் பெருமைகளையும், மகிமைகளையுஞ் சிந்தித்து எங்களை அவருக்கே அர்ப்பணஞ் செய்வோம். அப்போது ஆண்டவனின் இனிய மென்மையான, நன்மையான, மகிமையான பேச்சினை எங்கள் செவிகள் கேட்கும். அவரின் அற்புதமான காட்சியைக் காண்போம் இறைவனோடு வாழ்ந்து, அவன் சித்தப்படி நடப்பதே மேலான இன்பத்தையளிக்கும். அதுவே சலனமற்ற சாந்தமான வாழ்க்கையாகும்.

நாங்கள் செய்யுமொவ்வொரு சிறு காரியங்களையும் எங்கள் உள்ளத்தின் ஒவ்வொரு சிந்தனைகளையுமெங்கள் நித்தியபிதா அறிகின்றார். நாங்கள் அவரின் உண்மைப் புத்திரர்களாக நடத்தல் வேண்டும். இறைவன் எங்கள் எசமான், நாமவரது ஊழியக்காரர் என்று உணர்வோமாக. அவர் காட்டும் பாதையே எம் பாதையாகட்டும். அவரைச் சேர்வதே எமது வாஞ்சையாகட்டும். எல்லாம் அவராய இறைவனுக்குள்ளே நாம் சீவிக்கவும், அவரை உள்ளத்திலே காணவும் அருள்புரிவாராக!

# வைகாசி விசாகம்

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. அவர்கள்

விசாக நட்சத்திரத்தினால் பெருமை பெற்றது வைகாசி மாதம் ஆகும். இம்மாதத்தை வைசாசி என்றும் கூறுவர். இதனைச் சோதிநாள் என்றும் போற்றுவர். சோதிப் பிழம்பதோர் மேனியாகக் கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட முருகப்பெருமான் அவதாரம் செய்த திருநாள் ஆகும். அவதாரம் என்பது கீழிறங்கி வருதல் என்ற பொருளில் வழங்குவது. என்றுமுள்ள பிறப்பு இறப்பற்ற ஒரு பொருள் உலகத்தை உய்விக்கும் பொருட்டு இறங்கி வருவதனையே அவதாரம் என்கிறோம். தேவர்களின் வேண்டுதலை ஏற்று சிவபெருமான் தமது நெற்றிக் கண்ணினின்றும் முருகனைத் தோற்றுவித்த சம்பவத்தையே கந்தபுராணம் காட்டுகிறது.

''காலமாய்க் கால மின்றி கருமமாய்க் கரும மின்றி
கோலமாய்க் கோலமின்றி குணங்களாய்க் குணங்களின்றி
ஞாலமாய் ஞால மின்றி அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல் மூவிரு முகங்கொண் டுற்றான்.''

என்பர் கச்சியப்பர்.

தக்கன் பல ஆண்டுகள் கடுந்தவம் செய்தவன். இறைவன் அருளால் வரங்கள் பல பெற்றான். பின்பு வரங் கொடுத்த இறைவனையே மறந்து யாகத்தைச் செய்தமையால் பெருந்தண்டனை அடைந்தான். சிந்திக்கும் ஆற்றல் இல்லாத ஆட்டின் தலையொன்று தக்கனுக்குப் பொருத்தப்பட்டது. நன்றி மறந்தமையால் இந்நிலை கிடைத்தது. ஆனால் தேவர்களும் தமக்குத் தலைவன் சிவபெருமானே என்று தெரிந்தும் தக்கனின் அச்சுறுத்தலுக்குப் பயந்து யாகத்தில் பங்கு கொண்டமையால் பல துன்பங்களை அடைந்தார்கள். இவர்கள் தெரிந்து கொண்டே இத்தவறினைச் செய்தமையால் இவர்களுக்குத் தண்டனையை அசுரர்களிடமிருந்து இறைவன் ஏற்படுத்தினான். சூரபன்மன் ஆதியோரால் துன்பப்பட்ட தேவர்கள் துன்பம் தொலையும் காலம் அண்மியதும் இறைவனிடமே சென்று முறையிட்டு இரந்து நின்றனர்.

''ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவமும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்ப மின்றி
வேதமுங் கடந்து நின்ற விமலஓர் குமரன் றன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க என்றார்.''

அவ்வாறே எம்பெருமான் முருகன் உதித்த நாள் இதுவேயாகும். இந்த நாளில் முருகப்பெருமானை வழிபாடு செய்து அவன் நாமத்தை ஆயிரம் முறை ஜெபித்து ஆனந்தமடைவது சைவ மக்களின் இன்றியமையாத கடமையாகும். முருகப்பெருமானின் அவதாரத்தால் மகிழ்ந்த தேவர்கள்

*விசாகனைப் போற்றிய தினத்தை நாமும் இவ்விசாக தினத்தில் நினைவு கூருவோம்.*

''கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம நங்கை உளமதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலை புனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம நற்பரம னும்
எந்தை நம என்றும் இளையோய்நம குமரரநம என்று தொழுதார்.''

*அருணகிரிநாதரும் எம்பெருமான் முருகனை வழிபடுவோர்க்கு ஒரு தாழ்வு மில்லையே என்று அழகாகப் பாடியுள்ளார். நாமும் பாடி அமைவோம்.*

''சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர் வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாத வர்க் கொரு தாழ்வில்லையே.''

*என்றும் வாழ்க முருகன் நாமம்*

---

★ ★ ★

## அள்ளிப் பொழிவாய் அருட் பொழிவே!

உள்ளத் துறைந்து பெருக்கெடுக்கும் உணர்தற் கரிய ஒளிப்பிழம்பே
தெள்ளத் தெளிந்த தமிழ்வாணர் தினமுந் திளைக்கும் கலைக்கடலே
வெள்ளைக் கமலம் வீற்றிருக்கும் விரைசேர் பதத்தாய் பெருமாட்டி
அள்ளிப் பொழிவாய் அருட்பொழிவே! அகிலம் அளிக்கும் ஆரணங்கே!

கலைகள் திரண்டு கசிந்துருகிக் கமழ்நான் மறையும் கடிதொன்றி
அலைகள் புரண்டு கரைபடியும் ஆழிமுகட்டில் அழகொழுக
உலகை மயக்கும் வெண்மதியே! ஒளிர்சேர் கிரணம் மிகவுடையாய்
மலைகள் போலக் கலைகுவிக்கும் மனத்தார் மனத்துள் நிறைந்தவளே!

வேண்டும் விழையும் பொழுதெல்லாம் விரும்பும் வரங்கள் விதித்தருளி
யாண்டும் என்றும் நின்னுளத்தே யானாய் நீயாய்ப் பிறிதன்றி
ஆண்டுன் அருளைப் பொழிந்திடுவாய் அடியேன் துறத்தல் பொருந்தாதே
மாண்டென் னுடல்விட் டகலுயிரும் மலர்த்தாள் தன்னில் ஒன்றுகவே!

நீயென் னுடலம் உயிரானாய் நினைவும் நனவும் நீயானாய்
ஆயும் கலைகள் நீயானாய் அரும்பொன் மணியும் நீயானாய்
தாயும் சேயும் நீயானாய் தமரும் பிறரும் நீயானாய்
ஓய்வும் உழைப்பும் நீயானாய் ஒடுக்கம் உன்றாள் ஒன்றுகவே!

பொய்யும் புரட்டும் புறங்காட்டப் புதுமை வெள்ளம் பொங்கிவர
ஐயம் திரிபு மொன்றிவைகள் அவனி தனைவிட் டகன்றுவிடச்
செய்ய வாயால் திகழ்மறைகள் செகத்திற் செய்யும் பெருமாட்டி
நொய்யும் இடையாய் நுண்பொருளே நுன்புன் பாதம் நூன்முடிபே!

கையில் வீணை தனையேந்திக் கமலத் தமர்ந்து மறைதாங்கி
மெய்யில் படிக நிறமுடனே விளங்கும் பவளச் செவ்வாயும்
வையம் புரக்கும் நகைமுகமும் வாழ்வு வகுக்கும் செயல்களுமாய்
உய்யும் வகையை விதித்தருள்வாய் உமையே! வாணி! பராசக்தி!

— யாழ்ப்பாணன்

உ

சிறுவர் விருந்து

# தானம் செய்வதில் சுவைகண்டவர்

அருட்சகோதரி யதீஸ்வரி அவர்கள்

---

வீட்டுவாசலில் விளையாடிக் கொண்டு இருந்த வினோவிற்கு எரிச்சலாக இருந்தது. ஒரு அரை மணி நேரத்திற்குள் நாலைந்து பிச்சைக்காரர்கள் வந்துவிட்டார்கள். ''அம்மா பிச்சை'' என்று அவர்கள் இங்கிருந்து கத்துவதும், உள்ளே எத்தனையோ வேலைகட்கு இடையில் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கும் அம்மா உடனே இதோ வந்து விட்டேன், என்று உணவோ அரிசியோ கொண்டு வந்து பயபக்தியோடு அவர்களுக்கு கொடுப்பதும் ... இதோ ! இன்னொரு பிச்சைக்காரன் ''அம்மா பிச்சை'' என்று இவன் கூவவும் ''இதோ வந்தேனப்பா'' என்று உள் இருந்து வருகிறாள் அம்மா. இவனுடைய பிச்சைப் பாத்திரத்தில் உணவையும், குவளையில் மோரையும் நிரப்பி விட்டு குனிந்து கும்பிடுகிறாள்.

கோபம் கோபமாக வந்தது வினோவிற்கு. ''ஏன் அம்மா இந்தப் பிச்சைக்காரர்களில் முக்காவாசிப்பேர் நல்ல திடகாத்திரமான மனிதர்கள் தானே? சும்மா பிச்சை எடுத்துத் தின்று வயிறு வளர்க்கும் இந்த சோம்பேறித் தடியர்கள் ஏதாவது வேலைசெய்து உழைத்துச் சாப்பிடக் கூடாதா? எந்தநாளும் வரிசையாக பிச்சைக்கு வந்து விடுகிறார்கள். நீயும் அலுக்காமல் சலிக்காமல் பிச்சை போட்டு விடுகிறாய். போதாதென்று ஏதோ பெரியசாமியை கும்பிடுவதுபோல பெரிய கும்பிடு வேறு போடுகிறாய். அவர்கள் நல்ல இடங்கண்டு விட்டார்கள் தினசரி நம் வீட்டிற்கு வரும் பிச்சைக்காரர்கள் பெரிய அதிஸ்டசாலிகள் தான் போ.'' என்று பொரிந்து தள்ளினான் வினோ. தாய் தன் மகனின் தலையை அன்போடு தடவி விட்டாள்.

''கோபங் கூடாது வினோ. இங்கே பார்! நாம் வணங்கும் விஸ்வநாதர் கூட பிச்சாண்டிதானே? அவரும் நம்மைச் சோதிக்க பிச்சாண்டி வேடத்தில்தான் வருவார். எப்பவருவார் எந்த வடிவத்தில் வருவார் என்று நமக்குத் தெரியுமா? அதனாலேதான் ......... வருகின்ற யாசகர்களுக்கு எப்பவுமே இல்லை என்று சொல்லாமல் பிச்சை போட்டு விட்டான். தற்செயலாக வரும் சிவபெருமானிற்கும் அது கிடைத்து விடும் அல்லவா? அப்போ அவருடைய கிருபையும் நமக்கு கிடைக்கும் தானே?

தாய் மெதுமெதுவாக தன்னிடங் கூறியதை சிறுவன் ஆழமாக யோசித்தான்.

உண்மைதான் ''தரித்திர நாராயணன்'' வடிவில் வருபவர் உண்மையில் பிச்சாண்டியான சிவனாகவும் இருக்கலாம் அல்லவா?

அதன் பிறகு ... ...

பிச்சைக்காரன் வாசலில் வந்து கூவு முன்னே உணவுப் பண்டத்துடன் ஓடி வருவான் வினோபா

பயபக்தியுடன் அவர்களுக்கு உண்ண உணவும் பருகும் நீரும் உதவுவான்

தாய் மகிழ்ந்தாள் ... ...

பிற்காலத்தில் ... ...

பட்டப்படிப்பால் பெற்ற சான்றிதழ்களை கிழித்துப் போட்டுவிட்டு, கட்டிய துணியுடன் தேச சேவைக்குப் புறப்பட்டான் அந்த இளைஞன் வினோபா ... ...

உணவும் காசும் மட்டுமல்ல — நிலப் பிரபுக்களிடையே யாசித்து, நிலத்தை தானமாகப் பெற்று — அதனை வறிய மக்களிற்கு தானமாக வழங்கி பூதான இயக்கத்தின் தந்தை எனப் பெயர் பெற்றான் அந்த இளைஞன் மகாத்மா காந்தியினாலேயே

''ஆச்சார்ய வினோபாஜி'' என்று போற்றப்பட்ட அவர்தான் சர்வோதய இயக்கத்தின் தந்தை — ஆச்சார்ய வினோபா

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்திலே மகாத்மா காந்திஜியுடன் தோளோடு தோள் கொடுத்த அகிம்சை வீரர் இந்த வினோபாவே. கடைத்தரமான ஏழைக்கும் உயரவழிகாட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் ''சர்வோதயம்'' என்ற இயக்கத்தை ஆரம்பித்து தொண்டிற்கு இலக்கணம் வகுத்தவர் இவர். மிகப் பெரிய கல்விமான் — ஏழைகளுக்கு உதவுவதே இறைவனுக்குச் செய்யும் பணி என்பதை உணர்ந்து உணர்த்தியவர் இவர்.

### ''அருள் ஒளி'' வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

''அருள் ஒளி'' மாதம் தோறும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இம்மலருக்கு பொருத்தமான, தரமான, ஆக்கங்களை நாம் தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். நீங்கள் எங்களுக்கு அனுப்ப வேண்டிய முகவரி,

ஆசிரியர்
''அருள் ஒளி''
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஆசிரியர்
''அருள் ஒளி''
திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.



தொடர் – 3

# சிறுவர் கந்தபுராண அமுதம்

— மாதாஜி

## 9. மன்மதன் எரிந்தான்

சூரபன்மனின் கொடுங்கோல் ஆட்சியால் வருந்தினார்கள் தேவர்கள். சிவபெருமான் தனது யோக நிலையை விடுத்து, இமவான் மகளாகிய பார்வதியைத் திருமணம் செய்து ஓர் குமரனைத் தருதல் வேண்டும். அக்குமாரனே சூரனை அழிக்க முடியும் என நினைத்தார்கள்.

சிவபெருமானின் யோக நிலை நீக்க வேண்டுமோனால் மன்மதன் சிவபெருமானின் யோக நிலையை நீக்க வேண்டும் என தேவர்கள் நினைத்தார்கள். அதனால் பிரமன் தன் தம்பியாகிய மன்மதனிடம் சென்றான். ''தம்பி உன்னால் ஓர் காரியம் ஆக வேண்டும் சூரனால் நாங்கள் மிகவும் வேதனைப்படுவதை நீயும் அறிவாய் அதனால், நீ சிவபெருமானின் யோக நிலையைக் கலைக்க வேண்டும். பின்னர் சிவபெருமான் உமாதேவியை மணப்பார். குமாரன் உதிப்பான் எங்கள் கவலையும் ஒழியும்'' என்றான்.

மன்மதன் நடுங்கினான் வருந்தினான். ''சிவனுடன் போர் செய்வதால் நான் அழிந்து விடுவேன் என்றான் பிரமன் நீ போய் சிவபெருமானின் யோக நிலை கலைக்க மறுத்தால், நான் சாபம் போடுவேன் என்று'' கூறினான்.

பிரமனின் சாபத்திற்கு அஞ்சிய மன்மதன், தனது துணைவி ரதியுடன் கயிலை மலைக்குச் சென்றான். தன்னுடன் கூட வந்த பரிவார சேனைகளை மலை அடிவாரத்தில் நிறுத்தி விட்டு மலைமேல் ஏறிச் சென்றான்.

மன்மதனின் கையில் கரும்பு வில்லும் பஞ்ச பாணங்களும் இருந்தன. இறைவன் மோன நிலையில் காணப்பட்டார். மன்மதன் இறைவனை மனதில் தியானம் செய்தான் பின்னர் கரும்பு வில்லை வளைத்து பஞ்ச மலர் அம்புகளை ஒன்றன் பின் ஒன்றாகச் சிவபெருமானைக் குறிவைத்து எய்தான். சிவபெருமான் நெற்றிக் கண்ணைச் சிறிதே திறந்தார். அவ்வளவுதான் மன்மதன் வெந்து சாம்பரானான்.

இதனைக் கண்ட ரதிதேவி துயரக் கடலில் ஆழ்ந்தாள். அவளுடைய இரு கண்களில் நின்றும் கண்ணீர் ஆறாகப் பெருகியது. ரதிதேவி மன்மதனின் சாம்பலைப் பார்த்துப் பலவாறு புலம்பினாள். பின்னர் சிவபெருமானைப் பிரார்த்தனை செய்தாள். எம்பெருமான், நாம் பார்வதியைத் திருமணம் செய்துகொண்டு வருவோம் அந்த நேரத்தில் மன்மதன் உயிர்ப்பான் என்று அருள் புரிந்தான்.

இரதிதேவி, மன்மதனையும் சிவனையும் நினைந்து தவம் செய்யத் தொடங்கினாள்.

## 10. மலைமகள் தவம்

ஒருநாள் தட்சாயணி தக்கன் வளர்த்த இந்த உடலை நீக்க வேண்டும் சிவத்துரோகம் செய்த தக்கன் வளர்த்த இந்த உடலை நீக்க அருள வேண்டுமெனத் தன் பதியாகிய சிவனை வேண்டினாள். சக்தியின் வேண்டுதலை ஏற்றுக் கொண்டார். உடனே தாட்சாயணி கற்பூரம் கரைவது போன்று கரைந்து விட்டாள்.

பலகாலமாக இமயமலையரசன் உமாதேவி தனக்கு மகளாக பிறக்க வேண்டுமெனத் தவம் செய்தான். ஒருநாள் இமயமலை வானளாவ வளர்ந்து நின்றது. அங்கு தேவாமிர்தம் போன்ற தடாகத்தில் ஆயிரம் இதழ்களுடைய செந்தாமரையில், ஆயிரம் சூரியப் பிரகாசம் போன்ற பெண்குழந்தை காணப்பட்டது. சந்தியா வந்தனம் செய்ய இமவான் வந்தான். அங்கு தாமரையில் அழகிய பெண் குழந்தையைக் கண்டான். அதனை இரு கைகளாலும் வாரி முத்தமிட்டான். பின்னர் அக் குழந்தையைத் தன் மனைவியாகிய மேனையிடம் கொடுத்தான்.

பார்வதி தன் குழந்தைப் பருவத்தில் சிறு சோறு காய்ச்சி விளையாட விரும்பினார். இதனால் மூன்று இரத்தினக் கற்கள் அடுப்பாகின்றது முத்துச் சிப்பிகள் பாத்திரங்கள் ஆகின்றன. முத்துக்கள் அரிசி ஆகின்றன. நவரத்தினம், வைடூரியங்கள் காய்கறிகளாகின்றன. பொன்னால் செய்யப்பட்ட பொம்மைகளை உண்ண வைத்து அற்புதமாக விளையாடினார்.

பார்வதி தேவிக்கு ஐந்து வயதானதும் ஆலமுண்ட சிவனை நினைந்து தவம் செய்ய விரும்பியது. இதனால் தான் தவம் செய்யும் விருப்பத்தைப் பெற்றார்க்குச் சொன்னாள். முதலில் பெற்றார் மறுத்தனர். உலக வாழ்வின் நிலையாமையைப் பார்வதி விளக்கினாள். இதன் பின் பெற்றார் தவமிருக்கப் பன்னசாலை அமைத்துக் கொடுத்தார்கள். பார்பதி மணிகண்டன் சிவனை நினைந்து தவம் இருந்தாள்.

ஒரு நாள் சிவவேடம் தரித்த வயோதிபர் பார்பதி தவம் இருந்த தவச்சாலைக்கு வந்தார். பார்வதி தவம் செய்வதைக் கண்டார். ஐந்து வயதில் ஓடி விளையாடுவதை விட்டு உடலை வருத்தித் தவம் செய்யலாமா? என்று கேட்டார். அப்போது பார்வதியின் தோழி, ''சுவாமி

உமையாள்'' பரமேஸ்வரனைத் திருமணம் செய்யத் தவம் செய்கிறாள் என்றாள். கிழவர் சிரித்தார். ஏன் சிரிக்கிறீர்கள் என்று பார்வதி கேட்டாள்.

'பரமேஸ்வரன் எங்கே? உன் அழகு எங்கே, சிவனின் பித்தக் கோலம் எங்கே, அவன் இடையில் அணிவது புலித்தோல், போர்ப்பது யானைத்தோல், அணியும் ஆபரணம் பாம்பு, தலைமாலை, கையில் ஏந்துவது அக்கினி, உண்பது நஞ்சு, பூசுவது சுடலைச் சாம்பல்' என்று வயோதிபர் கூறினார்.

பார்வதிக்கு கோபம் வந்துவிட்டது. 'உம்மைச் சிவவேடம் தரித்தமையால் சும்மா விட்டேன் அல்லது சிவத்துரோகம் கூறிய நாவை வெட்டியிருப்பேன் என்று கூறினாள். வயோதிபர் புன்முறுவல் செய்து தன் உருவம் காட்டினார். சிவபெருமானே வயோதிப வடிவில் வந்து வாதாடினார் என்று அறிந்த தேவி எம்பெருமானை விழ்ந்து வணங்கி மன்னிப்புக் கேட்டாள்.

## 11. பார்வதி திருமணம்:

எல்லாம் வல்ல சிவபெருமான், பார்வதியைப் பெண்கேட்டு சப்த ரிஷிகளை இமயமலை அரசனிடம் அனுப்பினார். அரசனும் மனைவியும் மகிழ்ந்து தமது விருப்பத்தை சிவபெருமானுக்குச் சப்தரிஷிகள் மூலம் தெரியப்படுத்தினார்.

இமவான், பார்வதியின் திருமணத்திற்காகத் தேவதச்சனை அழைத்து, தனது நகரை இந்திர லோகம் போல அலங்கரிக்கக் கட்டளையிட்டான். தேவதச்சனும் அவ்வாறு மிகவும் கவர்ச்சிகரமான வகையில் நகரை அலங்காரம் செய்தான். நகரம் முழுவதும் நறுமண மலர்களும் தூவப்பட்டுக் காணப்பட்டது.

தேவர் கூட்டம் முதலாக முனிவர், ஞானியர், இருஷியர் கூட்டங்களும் காணப்பட்டன. எள் விழக்கூட இடமின்றி நெருசலாக இருந்தது. சரஸ்வதி, இலட்சுமி, நாராயணன், இந்திராணி முனிவர்களின் பத்தினிகள் என்று எல்லாரும் இமயமலைக்கு வந்து குவிந்தார்கள்.

இமவான் தனது சுற்றத்தாருடன் மாப்பிள்ளை அழைக்கத் திருக் கைலாயம் சென்றான். நந்தி தேவரின் அனுமதியுடன் உள்ளே சென்றான். சிவபெருமானை வணங்கி, எம்பெருமானே! அகிலாண்ட நாயகியைத் தங்கட்குக் கன்னிதானம் செய்ய பங்குனி உத்தர நாளே சிறந்த நாளாகும். அது இன்றுதான். எனவே தாங்கள் திருவருள் கூர்ந்து எமது நகருக்கு எழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பித்தான்.

சிவன் தமக்கு முன்னே இமவானை, அவனுடைய நகருக்கு அனுப்பினார். பின்னர் திருமணக்கோலம் கொண்டார். தனது திருமணக் கோலம் பார்க்க எல்லா உருத்திரர் முதலாகப் பல கணங்களையும், பிரம்மா இந்திரன் முதலான தேவர்களையும் கூப்பிட்டார். நந்தி

முன்னே செல்ல எம்பெருமான் மணமகளின் நகரம் நோக்கிச் சென்றார். சந்திரர் சூரியர் குடை பிடித்தனர். வாயு சாமரையும், வருணன் சாந்து தெளித்தனர். பூத கணங்கள் பல்லிசை இயம்பினர்.

இமவான் சுவாமியைத் தன் சுற்றத்தவருடன் எதிர்கொண்டு வரவேற்று வணங்கினான். தனது அழகான புதிய நகரத்துள், இருடிகள், முனிவர்கள், தேவர்கள் சூழ வந்து சுவாமியை அழைத்துச் சென்றான்.

சுவாமி மணவாளக் கோலத்துடன் வருகின்றார். மாமியார் முதல் பல்லாயிரம் மக்களும் தேவர் முதலானோரும் சுவாமியின் திருமணக் கோலம் கண்டு மகிழ்ந்தார்கள். பல்லாயிரச் சூரியப் பிரகாசம் போன்றது சுவாமியின் மணவாளக் கோலம்.

திருமணச் சாலை வந்ததும், மேனகை அரம்பை முதலானோர், எம்பெருமானுக்கு மங்களாரத்தி எடுத்தனர். திருஷ்டி கழித்தனர். சுவாமி மணவறையில் வீற்றிருந்தருளினார். சுவாமியை எல்லோரும் தரிசிக்கக் கூடியதாக இருந்தது.

பார்வதி பரமேஸ்வரன் திருமண வைபவம் காண எல்லாப் புவனங்களில் உள்ளவர்களும் வந்தனர். இதனால் இமயம் நடுங்கியது. பூமியின் வடபகுதி தாழ்ந்தது, தென்பகுதி உயர்ந்தது. உடனே எம்பெருமான் அகத்தியரை நோக்கித் தென்பகுதியிலுள்ள பொதிகை மலையில் போகும்படி பணித்தார். அங்கு தம் திருமணக் காட்சியைக் காண்பிப்பதாகவும் கூறினார். அகத்தியர் சிவபெருமானின் பணிப்பைச் சிரமேற் கொண்டு பொதியமலை சென்றார்.

பின்னர் பிரமா சிவபெருமானை நோக்கித் ''தேவரீரின் திருமணத்தை உலக நடைமுறையில் மண்ணில் வாழும் மண்ணவர்கள், அதனை அடியொற்றி நடக்க அடியேன், தங்களுக்குச் சாஸ்திர விதிப்படி திருக்கல்யாணம் நடத்த விரும்புகிறேன்'' என்று கூறினார் சிவபெருமான் ''அப்படியே ஆகட்டும்'' என்றார்.

வியாழபகவான் சுக்கிராச்சாரியார் முதலியோர் சூழப் பிரமதேவன் சிவபெருமானின் திருக்கல்யாணத்தை வேத ஆகம விதிப்படி நிறைவேற்றினார். மஞ்சளில் பிடிக்கும் பிள்ளையாருக்குப் பதிலாகக் கணநாதரே வந்திருந்தார். தேவர்வர்கள் பூமாரி பொழிந்தார்கள். இமவான் பொன் மழை பொழிந்தான். பின்னர் தேவி அம்மி மிதித்து அருந்ததி காட்டினார்கள். பின்னர் எல்லார்க்கும் சிவ திரவியங்கள் வழங்கப்பட்டன.

திருமணக் கோலத்துடன் சிவனும் பார்வதியும் வீற்றிருந்தார்கள். அப்போது இரதிதேவி சிவபெருமானிடம் மாங்கல்யப் பிச்சை கேட்டாள். எம்பெருமான் மன்மதன் வரும்படி அருளினார். ரதிதேவி எல்லையில்லா மகிழ்ச்சி யடைந்தாள் மன்மதன் இறைவனை வணங்கி மன்னிப்புக் கேட்டான்.

தொடரும்..............

உ
சிவமயம்

# முத்தமிழ் வேதத்தில் ஆகமத்தில் அரும்பொருள்–4

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

(சென்ற மாத இதழ் தொடர்ச்சி ... ...)

**யோகம்:**

சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் மூன்று குணங்களையும் சத்த பரிச ரூப ரச கந்தங்களாகிய ஐம்புலன்களோடு சேர அடக்கி, மூலாதாரத்தினின்றும் பிராணவாயுவை மேலெழுப்புகின்ற இடைகலை பிங்கலை என்னும் நாடிகள் இரண்டினையும் சீராக அடக்கிச் சுழிமுனை என்னும் நடு நாடியைத் திறக்க வேண்டும். அப்போது தியானத்தான மாகிய புருவமத்தியில் கருத்தைச் செலுத்த வேண்டும். அங்கே சூக்கும வகையால் நிகழும் அநவரத தாண்டவச் சிலம்பு ஒலி கேட்கும். அவ்வொலியோடு திருவைந்தெழுத்து ஓரெழுத்தாக ஒலிக்கும் ஞான தரிசனத்தை உணரலாம். அதனோடு திருவருள் சுரக்கும் பரவெளியிடமாகப் புகுந்து தியானிப்போனாகிய தானும் தியானமும் தோன்றாது தியானப் பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப் பெறுவர் சிவயோகிகள் அவர்கள் பெறும்பதம்-சாரூபம்.

அவ்வுண்மையினைத் திருவாதவூரடிகள் புராணத்தில், ஞானகுரு சற்சீடனாகிய திருவாதவூரருக்கு உபதேசிக்கும், அமல வாசகத்தால் நன்கு அறியலாம்.

"முக்கு ணம்புல னைந்துட னடக்கி
 மூல வாயுவை யெழுப்பி வழியைச்
சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத்
 திறந்து தாண்டவச் சிலம்பொலியுடன் போய்த்
தக்க வஞ்செழுத் தோரெழுத் துருவாந்
 தன்மை கண்டருள் தரும்பெரு வெளிக்கே
புக்க முந்தின ரெமதுருப் பெறுவார்
 புவியில் வேட்டுவ னெடுத்தமென் புழுப்போல்."

இவையும் இவை போல்வனுமான விரிவான யோகப் பயிற்சியின் விளக்கங்களை முத்தமிழ் வேதமாகிய தேவாரத்தில் தேடிக் காணமுடியாது. ஆனால் ஆகமத்தின் அரும்பொருளில் ஒன்றான யோகத்தைப் பொட்டிட்டாற்போல் சுட்டிக்காட்டும்.

தேவார முதலிகள் மூவரும் இறையுணர்வில் திருவருள் வெள்ளத்தில் அழுந்தி தம்வசமிழந்து அவன் வசத்தில் மூழ்கித் தமதுரை அவ

னுரையாக வந்த வாக்கு தேவார மணிகள். அவற்றுள் அங்கு ஒன்று இங்கு ஒன்றுமாக வருவன ஆகம நுண்பொருள்.

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள, அளப்பருங்கரணங்களுகுஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக"

"உணர்வி னேர்பெற வருஞ்சிவ போகத்தை யொழிவின்றி
யுருவின்கண் அணையு மைம்பொறி யளவினு மெளிவர வருளப்"

(பெரிய புராணம்)

பாடுவதனால் அவ்வாக்குகளைத் தெய்வ வாக்குகளாகக் கொள்வதல்லால் மானுட மொழியாக மதிக்கலாமோ... ...

"நெறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்போல் தம்மை யிருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே

"பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே—"

போன்ற திருமூலர் திருமந்திரப் பாடல்கள் விளக்குவன போல் யோகத்தை உணர்தல் அரிதினும் அரிது.

யோகநெறி இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி — என்னும் எட்டு அங்கங்களைத் தாங்கியது.

**இயமம் :** துன்பஞ் செய்யாமை, வாய்மை, களவு, பிரமசரியம், அன்பு, இரக்கம், பொறுமை, தைரியம், ஆசாரம், சுத்தி என்பன —

**நியமம் :** தவம், மகிழ்வு, தெய்வசிந்தனை, தானம், பூசை, ஞானசாத்திரம் கேட்டல், பழியஞ்சுதல், பத்தி, செபம், விரதம் — என்பன —

**பிராணயாமம்** ; சுவாசத்தை ஒருவழிப்படுதல், பிரத்தியாகாரம் — மன அடக்கம்.

**தாரணை** — மனத்தை ஒருவழிப்படுத்தல், தியானம் — இறைவனைத் தியானித்தல்.

**சமாதி** — தியானத்தில் நிற்றல்.

இவ்வாறான யோகமார்க்கம் சம்பந்தமான விரிவுகளைத் தன்னகத்துத் தாங்கிய செந்தமிழ் முத்துக்கள் பதித்த முத்தமிழ் வேதம் ஒருசிலவற்றை உதாரணத்திற்கு தருகின்றோம்.

சினமலி யறுபகை மிகுபொறி சிதைதரு வகைவளி நிறுவிய
மனனுணர் வொடுமலர் மிசையெழு தருபொருள் நியதமு முணர்பவர்
தனதெழி லுருவது கொடுவடை தருபர னுறைவது நகர்மதிள்
கனமரு வியசிவ புரநினை பவர்கலை மகடர நிகழ்வரே (திருமுறை — 1)

மேனியிற்சீ வரத்தாரும் விரிதருதட் டுடையாரும் விரவலாகா
ஊனிகளா யுள்ளார்கொற் கொள்ளாது முள்ளுணர்ந்தங் குய்மின் தொண்டீர்
ஞானிகளா யுள்ளார்க னான்மறையை முழுதுணர்ந்தைம் புலன்கள்செற்று
மோனிகளால் முனிச்செல்வர் தனித்திருந்து தவம்புரியும் முதுகுன்றமே
(திருமுறை— 1)

ஊனிலு யிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே (திருமுறை — 3)

சந்தியானைச் சமாதி செய்வார் தங்கள்
புந்தி யானைப்புத் தேளிர் தொழப்படும்
அந்தி யானை ஆமாத்தூர் அழகனைச்
சிந்தி யாதவர் தீவினை யாளரே (திருமுறை — 5)

உயிரா வணமிருந் துற்று நோக்கி உள்ளக் கிழியி
னுருவெழுதி, உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால் உணரப்
படுவாரோ டொட்டி வாழ்தி, அயிரா வணமேறா தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட, அயிரா வணவே யென்னம்மா
னேநின் அருட்கண்ணால் நோக்கா தார்அல்லா தாரே (திருமுறை — 6)

தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாடொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூர்எம் அடிகளே (திருமுறை — 7)

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப் பொறைஎனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையு மன்றே (திருமுறை — 4)

***யோகத்தினால் கடவுளை வழிபாடு ஆற்றுவது யோகநெறி. யோகிகள் நீண்ட காலம் வாழ்ந்தனர். சமாதி கூடி இருப்பர். சித்துக்கள் செய்வதில் சாதுரியர் திருமூலர், '... மிக்குயர்ந்த வரசின் கீழ்த் தேவிருக்கை யமர்ந்தருளிச் சிவயோகம் தலைநின்று பூவலரு மிதயத்துப் பொருளோடும் புணர்ந்திருந்தார் ...' மூவாயிரம் ஆண்டுகள்.***

(பெரிய புராணம்)

" புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
யுண்டியா யண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணா
மன்ன வென்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றினாய் பதையேன் மனமிக வுருகேன்
பரிகி லேன்பரி யாவுட றன்னைச்
செற்றிலே னின்னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

என்பது திருவாசகம் — வளரும்


**உங்கள் அபிமான 'அருள் ஒளி' கிடைக்கும் இடங்கள்**

**அலுவலகம்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

**ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்**
**கோவில் வீதி**
**நல்லூர்.**

உ

சிவமயம்

# யோகர் சுவாமிகள்

**அமரர் ச. அம்பிகைபாகன் அவர்கள்**
முன்னைநாள் அதிபர்,
வைத்தீஸ்வரா வித்தியாலயம்.

*பரத கண்டத்தைப் புண்ணிய பூமியென்று விவேகானந்தர் முதலியோர் கூறியதற்கு காரணத்தை ஆராய்ந்தால் அங்கு காலத்துக்குக் காலம் வாழையடி வாழையாக சீவன் முக்தர்கள் தோன்றுவதே என்பது புலப்படும். பரதகண்டத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும் இலங்கையிலும் காலத்துக்குக் காலம் கடையிற்சாமி, செல்லப்பா சுவாமி போன்ற பெரியோர்கள் தோன்றியுள்ளனர். இவர்கள் மரபிற் தோன்றியவர்களே யோக சுவாமிகள்.*

## செல்லப்பா சுவாமி

*யோகர் சுவாமிகளின் குருவாகிய செல்லப்பா சுவாமிகள் கடையிற் சுவாமியின் சீடராவர். இவரை ஞானியென்று அறிந்தவர்கள் மிகச்சிலரே. இவருடைய பேச்சையும் செயலையும் பார்த்த பெரும்பாலார் இவரை விசரர் என்று கருதி விசர்ச் செல்லப்பா என்றே அழைத்தனர். தமது சுயரூபத்தை உலகுக்குக் காட்ட விரும்பாத இப்பெரியாருக்கு விசர்ச் செல்லப்பா என்ற பெயர் சந்தோஷத்தைக் கொடுத்திருக்கும் என்பது திண்ணம். குலசேகர ஆழ்வார் தம்மைப் பற்றிக் கூறியது செல்லப்பாச் சுவாமிக்குப் பொருத்தமாக இருக்கும்.*

> ''பேயரே எனக்கு யாவரும் யானும் ஒரு
> பேயனே எவர்க்கும் இது பேசியென்
> ஆயனே அரங்கா என்று அழைக்கின்றேன்
> பேயனாய் ஒழிந்தேன் எம்பிரான் உனக்கே.''

*இவருடைய புறத்தோற்றத்தை கண்ட அநேகர் இவரிடம் நெருங்கவில்லை அதற்கு இவர் இடங்கொடுக்கவும் இல்லை. இப்பெரியாரே நமக்கு ''முழுதும் உண்மை'', ''ஒரு பொல்லாப்பும் இல்லை'', ''எப்பவோ முடிந்த காரியம்'', ''நாமறியோம்'' என்ற மகாவாக்கியங்களைக் கொடுத்தருளியவர். இவர் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியிலுள்ள ஒரு சிறு குடிசையில் வசித்தார். யோக சுவாமிகள் இவரை நல்லூர் தேரடியில்தான் சந்தித்தார் என்பதை 'நற்சித்தனை' பாடல்கள் வழியாக நாம் அறிகின்றோம். அவர் தமது நற்சிந்தனைப் பாடல்களில் தமது குருவை கல்மனமும் கரையும் படி பாடிய மூன்று செய்யுட்களை இங்கே தருகின்றேன்.*

''சிரித்து நல்லூர் தெருவில் திரிபவர்
வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர்
கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்
எரித்த பவம் இனியெனக் கில்லையே.''

''பொறி வழியே போய் புகுந்து புலம்பித் திரிவேனை
நெறி வழியே நிறுத்தி நீயே நான் என்றுரைத்த
பெரியவனை பித்தனென பிறர் பேசும் பெம்மானை
செறி பொழில் சூழ் நல்லைநகர் தேரடியில் கண்டேனே.''

''காட்டிலே காளியுடன் கூத்தாடும் கண்ணுதலோன்
நாட்டிலே ஞான குருவாய் நயந்து வந்து
மீட்டான் அவன் தன் விரையார் மலரடியை
மாட்சிமை சேர் நல்லைநகர் தேரடியிற் கண்டேன்.''

இவற்றுள் முதல் செய்யுளில் தன் குருவின் புறத்தோற்றத்தையும் இரண்டாம் செய்யுளில் அவருடைய தன்மையையும் மூன்றாம் செய்யுளில் சிவபெருமானே தமது குருவாகத் தோன்றி அருள் செய்தார் என்பதையும் கூறுகிறார். யோகர் சுவாமியும் தமது குருவைப் போல் முற்றுந் துறந்த துறவியாயிருந்த போதிலும் யாழ்ப்பாணத்தார் மீது கொண்ட அன்பினால் தமது சுயரூபத்தைச் சிறிதளவு காட்டியுள்ளார். சுவாமிகளின் வாழ்க்கையை நாம் உற்று நோக்கும்போது பிரதானமாகப் புலப்படுவது அவருடைய பூரணமான துறவு நிலையே. தமது உடமை என்று எதையும் கருதுவது கிடையாது. நாளைக்கென்று ஒன்றையும் வைப்பதும் கிடையாது. அன்பர்கள் கொண்டுபோய்க் கொடுக்கும் பொருட்களில் தாம் உபயோகிப்பது மிகச் சிறுபகுதியே. ஒருவர் கொண்டு வரும் பழம் முதலியவற்றை மற்றவர்களுக்குக் கொடுப்பதே அவர் வழக்கம். அவருக்குத் தேவையான நேரத்தில் பணம் கிடைக்கும். உடனே அதைச் செலவு செய்து விடுவார். பற்றற்றவர்களுக்கு எல்லாப் பொருட்களும் தாமாக வந்தடையும் என்னும் உண்மையை நாம் சுவாமிகளிடம் காண்கிறோம். சுவாமிகள் இவ்வுண்மையை ஒருமுறை பின்வருமாறு கூறினார். "I am a beggar of beggars and a Maharajah of maharjahs." பிச்சைக்காரரில் இழிவான பிச்சைக்காரன் நான். மகாராசாக்களுள் சிறந்த மகாராசாவும் நான். சுவாமிகளின் இன்னுமொரு சிறந்த குணம் என்னவெனில் ஒரு விஷயத்திலாவது ஒரு மனிதனிலாவது கட்டுப்படுவது கிடையாது. சிற்சில காலங்களில் சிற்சில தொண்டுகளைச் செய்வார். பின்னர் அவற்றை அறவே விட்டுவிடுவார். சில பிள்ளைகள் சங்கீதம் கற்பதற்கு உதவி செய்யும் பொருட்டுச் சில காலம் வெள்ளிக்கிழமைகளில் வண்ணார்பண்ணையில் பஜனை நடாத்தினார். பின்னர் புராண படனத்தைப் புனருத்தாரணம் செய்யும் பொருட்டு பெரியபுராண படனம், கந்தபுராண படனம், இராமயண படனம் முதலியவற்றை நடத்தினர். பின்னர் இவற்றை விட்டுவிட்டார்.

சுவாமிகள் தன் மனம் பதியும் சில அன்பர்கள் வீட்டுக்குப் போவார். அவருக்கு விருப்பம் இல்லாவிட்டால் மற்றவர்கள் எவ்வளவு தெண்டித்தாலும் போகமாட்டார். எதையும் வழக்கப்படுத்திக் கொள்வது கிடையாது. ஒருமுறை சுவாமிகளுக்கு ஒரு அன்பர் நாலு ஐந்து நாட்களாக இரவில் தேநீர் அனுப்பி வந்தார். அடுத்தநாள் தேநீர் கொண்டு வந்த பையனைப் பார்த்து பின்வருமாறு கூறினார். ''நான் ஒரு பிச்சைக்காரன். பசித்தால் உங்கள் வீட்டுக்கு வந்து கேட்டு வாங்கிச்

சாப்பிடுவேன். இந்த வழக்கத்தை வைக்க வேண்டாம் என்று உன் தகப்பனாரிடம் சொல்'' என்றார்.

**சுவாமிகளின் அனுபவம்**

சுவாமிகளிடம் பலவித கொள்கையுடையவர்களும் பலவித நிலையிலுள்ளவர்களும் வருவார்கள். சுவாமிகள் ஒருவருடைய நம்பிக்கையையும் குழப்புவது கிடையாது. இதனால் ஒவ்வொருவரும் சுவாமிகள் தங்கள் தங்கள் கொள்கையை உடையவர் என்று கருதுகின்றனர். இதனால் இவருடைய உண்மை அனுபவம் இன்னதென்று அறிவது கடினம் தான். ஆனால் அவருடைய வாக்கைக் கூர்ந்து நோக்குவோருக்கு உண்மை புலப்படும். ''நீயே நான்'' ''சீவனே சிவன்'' ''நாமே அவன்'' என்னும் வாக்குகளைக் கவனித்தால் எங்கும் ஒரு பொருளையே அவர் காண்கிறார் என்பது புலப்படும். சுவாமிகளின் அனுபவத்தையே விவேகானந்தர் இயற்றிய சந்நியாச கீதமும் தெளிவாகக் கூறுகிறது. சுவாமிகள் எங்கும் பரம்பொருளைக் காண்பதால் தான் ஒருவரிடமும் குற்றம் காண்பது கிடையாது. எல்லாம் சிவன் செயல் என்று அறிந்தவர்களுக்கு வித்தியாசங்கள் தோன்றாதென்பது பின் வரும் தாயுமானவர் வாக்கால் நன்கு புலப்படும்.

''அவனன்றி ஓரணுவும் அசையாதென்னும்
பெரிய ஆப்த மொழி ஒன்று கண்டால்
அறிவாவது ஏது சில அறியாமை ஏது இவை
அறிந்தார் அறியார்கள் யார்
மௌனமோடிருந்தார் என்போடுடம்பெல்லாம்
வாயாய் பிதற்றும் அவரார்
மனதெனவும் ஒரு மாயை எங்கே இருந்து வரும்
வன்மையோடு இரக்க மெங்கே
பொய் மெய் இதம் அகிதம்
மேல் வரும் நன்மை தீமையோடு
பொறை பொறாமையும் எவ்விடம்
எவர் சிறியர் எவர் பெரியர்
எவர் உறவர் எவர் பகைஞர்
யாதும் உனையன்றி உண்டோ
இகபர மிரண்டினும் உயிருக்குயிராகி
எங்கும் நிறைகின்ற பொருளே.

**சுவாமிகளின் உபதேசம்**

சுவாமிகள் தம்மிடம் வருபவர்களுக்குச் செய்யும் உபதேசம் ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செவ்வனே செய்யவேண்டும் என்பதே பஞ்சமா பாதகங்களை ஒழித்து ஒருவன் தன் கடமையைச் சரிவரச்செய்து வருவானாயின் அவனுக்குப் படிப்படியாக உண்மை விளங்கி வரும் என்பது சுவாமிகள் கருத்து. ஒவ்வொருவரது கடமையும் அவரவர் பிராரத்துவத்துக்கு ஏற்றதாக இருக்கும் என்றும் அதில் ஏற்றத்தாழ்வு காண்பது பிழை என்றும் கூறுவார். உண்மையை அறிய விரும்பு

வோர் எல்லோரும் துறவுநிலை பூணவேண்டும் என்ற அவசியம் இல்லை என்பார். பண்டைக்காலத்து ரிஷிகளும் இக்காலத்து செல்லாச்சி அம்மையார் போன்றவர்களும் இல்லறத்திலிருந்தே பரம்பொருளை எய்தினர் என்று எடுத்துக்காட்டுவார். மனிதன் தன்னைத் தானே திருத்திக் கொள்ள வேண்டும் அல்லாமல் உலகத்தைத் திருத்த எத்தனித்தல் விவேகானந்தர் உதாரணமாகக் கூறிக்காட்டிய நாய் வாலை நிமிர்த்த முயலுவதை ஒக்கும் என்பார். ஆயினும் உலகத்துக்கு நன்மை செய்வதால் நாம் அதிக நன்மையடைகிறோம் என்பதை உணரவேண்டும் என்றும் கூறுவார். உலகத்தில் வாழ்வோர் நற்பழக்கங்களைப் பழகிக்கொள்ள வேண்டும் என்றும் ஒரு பழக்கத்தைப் பழகிக்கொண்டால் அதை விடுவது ஞானிக்கும் கஷ்டம் என்றும் கூறுவார்.

**சுவாமிகளது அரிய குணம் :**

தமது அன்பர்களை ஒருபோதும் மறவாமை சுவாமிகளின் அரிய குணம். அன்பர்களுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் தம்மால் இயன்ற உதவி புரிவார். செல்லாச்சி அம்மையாரிடம் சுவாமிக்கு அதிக அன்பு உண்டு. அம்மாவும் சுவாமியை தனது சகோதரனாகவே பாவித்து வந்தார். இறுதிக் காலத்தில் அம்மா நோய்வாய்ப்பட்டு இருந்தபோது உளத்தூய்மை அற்றவர்கள் கொடுக்கும் உணவை உட்கொள்ள முடியாதவராய் இருந்தார். இதைக் கண்ட யோக சுவாமிகள் சில அன்பர்களைக் கொண்டு உணவு சமைப்பித்து தம் கையில் எடுத்துப் போய் கொடுத்து வந்தார். இப்படிப் பல அன்பர்களுக்கு உதவி செய்திருக்கிறார். சுவாமியைக் குறை கூறுவோரும் உளர். இவர்கள் அன்பின் வலிமைமையை அறியாதவர்கள். சிவபெருமான் பக்தி வலையில் பட்டால் சுவாமிகள் படுவது அதிசயமா?

**அரிய தொண்டு :**

சுவாமிகள் யாழ்ப்பாணத்துக்கு அருந்தொண்டு புரிந்திருக்கிறார். அநேக இளைஞர்களை நெறியல்லா நெறியில் போக விடாது நன்னெறிப் படுத்தியுள்ளார். பொதுசன சேவையில் யாழ்ப்பாணத்தில் இப்போது ஈடுபடுபவர்களில் அனேகர் சுவாமிகளின் கருணைக்கு உரியவர். நாத்திகர் கூட அவருடைய சக்தியால் ஈர்க்கப்பட்டு கடவுளிடத்து நம்பிக்கை இல்லாவிட்டாலும் சுவாமிகளிடம் நம்பிக்கை உள்ளவர்களாக காணப்பட்டனர். சுவாமிகளுக்குத் தமிழ்மொழியில் நல்ல பற்று உண்டு. அப்பற்றை மற்றவர்களுக்கு ஊட்டினார். தமிழ் நூல்களில் திருவாசகத்தில் தான் சுவாமிகளுக்கு அதிக பற்று என்று கூறலாம். அவருக்கு தேவாரம், திருவாசகம், திருப்புகழ், கந்தரலங்காரம் முதலிய நூல்களில் நல்ல பயிற்சி உண்டு. தம்மிடம் வருபவர்களை காலை மாலையில் சிவபுராணத்தைப் பாராயணம் செய்ய வைப்பார். ஒருமுறை ஒரு அன்பரை திருவாசகத்தை வேண்டி சிவபுராணத்தை கிரமமாக ஓதும்படி கூறினார். இவ்வன்பர் திருவாசகத்தைப் பற்றி இதற்கு முன் கேள்விப்படாதபடியால் நூலின் பெயரை உடனே மறந்து விட்டார். வீட்டுக்குப் புறப்படும் போது சுவாமிகள் கூறிய நூலின் பெயர் என்ன என்று ஒரு அன்பரைக் கேட்டு எழுதிக் கொண்டு போனார். இவரைப் போல் சைவத்தமிழ் மணம் இல்லாதவர்க்கு சைவத் தமிழ் பற்றை உண்டாக்கி வைத்தார். இக்காலத்து எழுத்தாளர்களுள்

கல்யாணசுந்தர முதலியாருடைய நூல்களில் தான் சுவாமிக்கு அதிக விருப்பம். அவற்றில் ''சைவத்தின் சமரசம்'' என்னும் நூலே சிறந்தது என்பது அவர் கருத்து. சுவாமிகளுக்கு ஓரளவு சங்கீத ஞானமுண்டு. சில கீர்த்தனங்களை இயற்றி அவற்றைச் சுரப்படுத்தி சிவதொண்டனில் வெளியிட்டுள்ளார். சங்கீதம் கற்கும் பிள்ளைகளைத் தேவார திரு வாசகப் பதிகங்களை பண்ணோடு ஓதுவதற்குப் பழகும்படி கூறுவார். சங்கீதத்தில் அப்பியாசம் உள்ள பிள்ளை ஒன்று தேவாரங்களை முறை யாகப் பாட முடியாமல் இருப்பதைக் கண்டு தேவார திருவாசகப் பதிகங்களின் பொருளைக் கற்காமல் வெறும் சுரங்களைக் கற்பதால் பயனில்லை என்று கூறினார்.

**சுவாமிகளின் சக்தி:**

நமது நாட்டில் ஒரு பெரியவர் இருக்கிறார் என்றால் அவர் சோதி டம் சொல்லுவாரா அல்லது நோய்களை மாற்றுவாரா என்ற கேள் விகள் தான் முதலில் புலப்படும். இவற்றுக்கும் ஞானத்துக்கும் தொடர் பில்லை. பெரியாருக்கு சித்தி உண்டு. ஆனால் வாழ்க்கையில் அவர்கள் அதைப் பிரதானமாகக் கருதுவது கிடையாது. இதனை நம்மவர்களில் அநேகர் அறியவில்லை.

நன்றி
ஈழநாடு பத்திரிகை
23-03-1964

★ ★ ★

## அருளொளி காட்டியருள்வாய்

உமையென உனதிரு அடிமலர் தன்னையே
    நாடியென் நெஞ்ச முருக
உத்தமி மாயவன் தங்கையே என்னுயிர்த்
    தாயென வந்ததிருவே
இமையவர் போற்றிடும் இமவான் மடந்தையே
    இருகரம் கூப்புகின்றேன்
ஈராறு கரங்கொண்டு மஹிஷனை அழித்திட
    இந்நிலம் வந்ததேவி
எமைநாளும் காத்தருள் செய்யுமு கொடையிலே
    எழிற்கோலம் கட்டிநிதமும்
ஏற்றநல் வழிகாட்டி எமைவாழ வைத்திடும்
    எம்குல தெய்வம் நீயே
தீமையாம் இருள்போக்கி திருவருள் ஒளிகாட்டி
    தினமெமைக் காத்து அருளும்
திரிபுர சுந்தரி துர்க்கையே தெல்லியுழு
    கொடை வாழும் மெய்த் தெய்வமே.

கவியாக்கம் : சு. குகதேவன்
தெல்லிப்பழை

# " அருளொளி " – தகவல் களஞ்சியம்

## சித்திரைச் சதயம்

* திருநாவுக்கரசு நாயனார் குருபூசை 26-04-2003 சனிக்கிழமை சித்திரைச் சதய நட்சத்திரத்தில் துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் சிறப்பாக நடைபெற்றது. குருபூசையை முன்னிட்டு துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளின் சொற்பொழிவுகள், கூட்டுவழி பாடுகள் இடம்பெற்றன.

## சித்திரைப் பரணி

* வைரவ வழிபாட்டில் முக்கிய வழிபாட்டு விரத நாளாக கருதப் படுவது சித்திரைப் பரணியும், ஐப்பசிப் பரணியும் ஆகும் 02-05-2003 வெள்ளி துர்க்கை அம்பாள் ஆலயத்தில் வைரவ சுவாமிக்கு வடை மாலை சாத்தி விசேட அர்ச்சனை பூசை நடைபெற்றது.

## பேராசிரியர் அறவாணன் வருகை

* தமிழ் நாட்டுப் பேரறிஞரும், மதுரை மனோன்மணியப் பல்கலைக் கழக முன்னைநாள் துணைவேந்தருமான பேராசிரியர் க. ப. அறவாணன் துர்க்கை அம்பாள் ஆலயத்துக்கு வருகை தந்து கருத் துரை வழங்கினார். அவர்களுக்கு தேவஸ்தானம் பொற்கிழியும் பொன்னாடையும் வழங்கி கௌரவித்தது.

## திருஞானசம்பந்தர் குருபூசை – 18-05-2003

* வைகாசி மூல நட்சத்திரத்தில் திருஞானசம்பந்தர் குருபூசை 18-05-2003இல் சிறப்பாக நடைபெற உள்ளது.

## உலக இந்து மகாநாடு

* 02-05-2003 அன்று கொழும்பில் ஆரம்பமான இந்து மாநாட்டை முன் னிட்டு குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்கள் மற்றும் சமய நிறு வனங்களில் நந்திக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. அத்துடன் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள், விசேட சொற்பொழிவுகள் என்பனவும் இடம்பெற்று வருகின்றன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள், தனியார் மினிபஸ் வண்டிகள், ஒட்டோகளில் நந்திக்கொடிபறந்துகொண்டிருக்கின்றது.

குடாநாட்டில் உள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், அற நெறிப் பாடசாலைகள் போன்றவற்றில் நந்திக் கொடி, இந்துமா நாட்டுக் கொடிகள் பறந்து கொண்டு இருக்கின்றது. மொத்தத்தில் குடாநாடேஇந்துமாநாட்டையொட்டிவிழாக் கோலம்பூண்டு உள்ளது.

* 2ஆவது உலக இந்து மகாநாடு மே மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்திலும், நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்திலும் சிறப்பாக நடைபெறஉள்ளது.

உ

# செல்லப்பாச் சாமியார்

## வீட்டு நாயும் காட்டு நாயும்

மாவை - த. சண்முகசுந்தரம், B. A. அவர்கள்

---

*சுதுமலைச் செல்லப்பாச் சாமியார் மாவிட்டபுரத்தில் திருமணம் செய்தவர். சிறந்த முருகனடியார். தன் வாழ்நாள் முழுவதையும் தன் குடும்பத்தைக் கவனிப்பதிலும் முருகனுக்குத் தொண்டு செய்வதிலும் கழித்து வந்தார். தன் ஆயுட்காலத்தின் இறுதி நாட்கள் முழுவதையும் முருக வழிபாட்டிலே கழித்துப் பேரின்பம் கண்டவர். இல்லறத்தில் நின்று துறவறத்தைக் கடைப்பிடித்தவர்.*

*இவர் ஒரு நாள் பிற ஊர் சென்றிருந்தார். கோயில் வழிபாட்டை முடித்ததும் தன் நண்பன் ஒருவனிடம் சென்றிருந்தார். நல்வழிபாட்டை முடித்தவருக்குப் பசி எடுத்தது. கால் நடையாகவே எங்கும் செல்வார். காசைக் கையாலே தொடுவது மிக மிகக் குறைவு. ஆகவே நண்பன் வீட்டிலே பசி ஆறுவது அவரின் நோக்கம். ஆசாரக் குறைவானவர்கள் வீட்டிலே தங்கவும்மாட்டார். அப்படியான இடங்களில் உணவை வாங்கி உண்ணவும்மாட்டார். அவர் சென்ற நண்பன் வீட்டிலே கடிநாய் ஒன்று நின்றது. அதனை வழமையாகப் பகல் நேரங்களிலே கட்டிவைப்பார்கள் அன்று காலையில் நாயைக் கட்டிவைக்கப் பணியாளன் மறந்து விட்டான். குரைக்காமல் வந்த அந்த நாய் சாமியாரின் காலைக்கௌவி விட்டது. அந்த நண்பன் சாமியாரின் சீடனும் கூட.*

*''ஐயோ, சாமி, இந்த நாய் இப்படிச் செய்துவிட்டதே'' என்று நண்பன் அழாக் குறையாகச் சொன்னான். பின்னர் நாயை அடிக்கத் தடி எடுத்தான்.*

*''வேண்டாம் மகனே, நாயை அடிக்காதே.'' என்றார் சாமியார்.*

*நண்பன், பின்னர் தன்பணியாளனைக் கூப்பிட்டுத் தாறுமாறாக ஏசத்தொடங்கினான்.*

*''வேண்டாம் மகனே, பாவம் அந்த ஏழையை ஏசாதே'' என்றார்.*

*''சாமி, மருந்து கட்டவோ?'' என்றான் நண்பன்.*

*''வேண்டாம் மகனே'' என்றார் சாமியார். சாமியாரின் பொறுமையைக் கண்ட நண்பன் செய்வது இன்னது என்று தெரியாது தவித்தான். ஈற்றிலே கண்கள் கலங்கிவிட்டன. அழுதேவிட்டான் அந்தச்சீடன்.*

*''மகனே, சொல்வதைக்கேள். ஒரு பாட்டுப் பாடட்டோ?'' என்றார் சாமியார்.*

*''இந்தப் பாட்டு இந்த நேரம் எதற்கு? உங்களுக்குக் கடிகாயம் வேறு'' என்றான் சீடன்.*

*''மகனே கடியும் மிடியும். இந்த நேரம் பாட்டுப்பாட உவப்பான நேரம். நீ ''ஓம்'' என்றால் பாட்டுப் பாடுவேன்'' என்றார் சாமியார்.*

*''சாமியாரின் வாயாலே பாட்டுப்பாட, அதனை நான் கேட்க என்ன தவம் செய்தேனோ தெரியாது,'' என்றான் சீடன்.*

*தனக்குரிய கணீர் என்ற குரலிலே சாமியார் பாடினார் பாடல் இதோ.*

''நாய் கடித்ததென்றுமே
நலிந்து நிற்பதெனடா
நாய் கடித்ததேனடா
இந்தக் (தன்நெஞ்சைத் தொட்டு)
காட்டு நாயும் தானுமே
வேட்டை குட்டி மூன்றையும்
கூட்டி வந்த தேனடா?
வீட்டு நாயும் விரைந்துமே
காட்டு நாயைக் கடித்ததே
வீட்டு நாயின் உணவையே
காட்டு நாயும் குட்டியும்
போட்டுப் பிடிக்க லாமோ? ''

*பாடல் முடிந்ததும் சாமியார் சிரித்தார்.*

*''மகனே, பொருள் விளங்குகின்றதா?'' என்றார். ''பாதி விளங்கவில்லை'' என்றான் சீடன்.*

*''சரி, நல்லது சொல்வேன் கேள். என்னை உன் நாய் கடித்து விட்டது என்று நீ ஏன் துன்பப்படுகின்றாய். நாய் ஏன் கடித்தது என்று கேள்வியைக் கேட்டுப்பார். நான் காட்டு நாய். காடு மேடு என்று திரிபவன். நானும் ஒரு வகையில் நாய்தானே? இல்லையோ? காட்டு நாயாகிய நான் வேட்டை நாய்க்குட்டி மூன்றை வளர்க்கின் றேன். அந்த நாய்க்குட்டிகள் என்னுடன் வந்தன'' என்றார்.*

*இதனைக் கேட்ட அந்தச் சீடன் விளங்காமல் அங்கு மிங்கும் பார்த்தான்.*

*''சாமி, நாய்க்குட்டிகளைக் காணவில்லையே' என்றான் சீடன் வியப்புடன்.*

*''நல்லது சொல்வேன் கேள். நான் கொண்டுவந்த நாய்க்குட்டி களை இலகுவிலே காணமுடியாது. நன்கு தேடினால் தான் தெரியும். அந்தக் குட்டிகள் இந்த நெஞ்சாம் கூட்டிலே வாழுகின்றன. அவை ஆணவம், கன்மம், மாயை, நான் எனக்குப் பசி என்று வந்தேன். ஆகவே உங்கள் வீட்டுநாய் விரைந்து என்னைக் கடித்தது. அந்த நாயின் உணவை வாங்கி உண்ணவே இந்த நாய் வந்தது. அந்த நாயிலே தான் பிழை இல்லை. இந்த நாயிலே தான் பிழை.'' கட கடவென்று சாமியார் சிரித்தார். சீடன் காலில் விழுந்து சாமியாரை வணங்கினான். பின்னர் உள்ளே சாமியாரை அழைத்துச் சென்று திரு வமுது வழங்கினான்.*

# வழிபாட்டுக்குரிய பொருட்கள்

வழிபாட்டுக்கு உரிய பூக்களை நேரில் நாமே சேகரித்துக் கொண்டு வருவது உத்தமம். தோட்டத்திலிருந்து மற்றவரைக் கொண்டு வரச் செய்வது மத்யமம். விலைக்கு வாங்குவது அதமம். பிறருடையது மிக அதமம்.

முந்தின நாளில் எடுத்ததை உபயோகிக்கக் கூடாது. பிராணிகள் அரித்தது, அவைகளின் காலால் தாண்டப்பட்டது, வாடியது, தொடக் கூடாத அசுத்தங்களால் தொடப்பட்டது, வாசனை இல்லாதது, கையினால் கொண்டு வரப்பட்டது, ஆடைகளில் சேகரித்துக் கொண்டுவரப் பட்டது, தானாகக் கீழே விழுந்தது, கோயில் தோட்டத்தில் உள்ளது ஆகிய மலர்கள் அர்ச்சனை செய்யத் தகுதியில்லாதவையாகும் பூக்களைச் செடியிலிருந்து கையினால் பறித்தெடுத்து பூக்குடலை அல்லது பாத்திரங்களில் போட்டுக்கொண்டு வரவேண்டும். தங்க புஷ்பத்தை தினந்தோறும் நீரில் அலம்பி பூசை செய்யலாம். வில்வம், துளசி இவற்றை ஒரு வாரம் வரை வைத்துப் பயன்படுத்தலாம்.

எருக்கு, ஊமத்தை இவற்றால் சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்யலாம். துளசி கணேசனுக்கும், வில்வம் சூரியனுக்கும், அருகம்புல் அம்பிகைக்கும், தாழம்பூ சிவனுக்கும், ஊமத்தை எருக்கு திருமாலுக்கும் உபயோகிக்கக் கூடாது.

சுத்தமான நீர், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் சேர்த்து அதனால் அபிஷேகம் செய்வது உத்தமம். பசுப்பால், பசும்தயிர், பசும்நெய், தேன், கரும்புச்சாறு, நாரத்தை எலுமிச்சை முதலிய பழச்சாறு, இளநீர், சந்தனம் இவை அபிஷேகத்துக்கு ஏற்றவையாகும்.

விக்ரகத்தைச் சுற்றிலும் இடைவெளி இல்லாதிருக்கும்படி பூக்களைத் தூவி அர்ச்சனை செய்வது மிக உத்தமம்.

தூபத்தைப் பாதத்திலும், தீபத்தை முகத்திலும் காண்பிக்க வேண்டும்.

சுத்த அன்னம், பழம் தேங்காய், பூக்கள் இவைகளை நிவேதனம் செய்து, தாம்பூலம், கற்பூர நீராஜனம் செய்ய வேண்டும்.


பிறகு மூன்று முறை வலம் வருவதும், ஐந்து முறை நமஸ்காரம் செய்வதும் உத்தமம்.

பிறகு தெய்வத்தைக் குறித்த பாடல்களை, தோத்திரங்களைப் படிக்க வேண்டும்.

நன்றி

இந்துமத ஆசார
அநுஷ்டானங்கள்





பொலநறுவையில் உள்ள
வ ஆலயங்களின் தற்போதைய நிலை.



கொழும்பு தமிழ்ச் சங்க
நூலகம்




கொழும்பு விவேகானந்த சபையின் நூற்றாண்டு விழா
(1903 - 2003)

